# பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தான் கிராமப்புற உறுப்புக் கல்லூரிகள் அதிகம்

## துணைவேந்தர் பெருமிதம்

பெரம்பலூர்

தமிழகத்திலேயே பாரதிதாசன் பல்கலைக்கழக கட்டுப்பாட்டில்தான் கிராமப்புற உறுப்புக் கல்லூரிகள் அதிகம் தொடங்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்தார்.

பெரம்பலூர் மாவட்டம் குரும்பலூரில் பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியில் ரூ.2 கோடியில் கட்டப்பட்ட 19 புதிய வகுப்பறைகளை பாரதிதாசன் பல்கலைகழக துணைவேந்தர் வெ.மா.முத்துக்குமார் அண்மையில் திறந்துவைத்தார். அப்போது, அவர் பேசியதாவது:

கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேறும் வகையில், அவர்களது கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் விதத்தில் தமிழக அரசு கிராமப்புறங்களில் அதிக எண்ணிக்கையில் உறுப்புக் கல்லூரிகளை ஏற்படுத்தி வருகிறது. தமிழகத்திலேயே பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் கட்டுபாட்டில்தான் கிராமமப்புறங்களை மையப்படுத்தி அதிகப்படியான உறுப்புக் கல்லூரிகள் அமைக்கப்பட்டுள்ளன என்றார்.

நிகழ்ச்சிக்கு, பெரம்பலூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் ஆர்.பி.மருதராஜா, சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் இரா.தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர்(பொறுப்பு) ந.ராசாராமன், உட்பட பலர் கலந்துகொண்டனர்.

of Library and Inform